பாடம் - 3 | الدرس الثالث

## நபி (ஸல்) அவர்கள் | محمد النبي ﷺ

முஹம்மத் நபி(ஸல்) அவர்களை அல்லாஹ் இறுதித் தூதராக அனுப்பி வைத்தான். அவரது தூதுத்துவத்தை இறுதித் தூதுத்துவமாக ஆக்கினான். அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும் அதற்கு மாறாக வணக்க வழிபாடு என்கிற பெயரில் மக்கள் ஏற்படுத்தி வைத்துள்ள சிலை வணக்கம் போன்றவற்றை விட்டு விட வேண்டும் என மக்களுக்கு வழிகாட்டுவதற்காக அல்லாஹ் அவரை அனுப்பி வைத்தான்.

முஹம்மது(ஸல்)தமது நாற்பதாம் வயதில் மக்காவில் இறைத்தூதராக அனுப்பப்பட்டார். நபியாக அனுப்பப்படு வதற்கு முன் அவர் தம் சமுதாயத்திலேயே ஏன் மனித குலத்திலேயே உயர்ந்த குணங்களைக் கொண்டவராகத் திகழ்ந்தார். மேலும் உண்மைக்கும் நம்பிக்கைக்கும் உயர்ந்த ஒழுக்கங்களுக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார். எந்த அளவுக்கெனில் அவருடைய சமுதாயத்தவர்கள் அவரை 'நம்பிக்கையாளர்" என்றே அழைத்தனர்.

முஹம்மத் எழுதப்படிக்கத் தெரியாதவராக இருந்தார். அல்லாஹ் அவருக்கு வஹி எனும் இறையருட்செய்தி மூலம் திருக்குர்ஆனை வழங்கினான். இதுபோன்ற ஒரு குர்ஆனை யாரேனும் இயற்றிக் கொண்டு வர முடியுமா? என அல்லாஹ் இந்தத் திருக்குர்ஆனில் மனித குலம் முழுவதற்கும் சவால் விடுகிறான்.

### இஸ்லாத்தின் அடிப்படைகள்

**1.அல்லாஹ்வை நம்புவது** - இது தான் இஸ்லாமிய மார்க்கத்தின்அடித்தளம். அல்லாஹ்வை நம்புவது என்றால் அல்லாஹ் ஒருவன் இருக்கிறான், அவன் தான் அனைத்தையும் படைத்தவன், அனைத்துக்கும் எஜமான், அகில உலகங்களையும் படைத்துப் பரிபாலித்து நிர்வகிப்பவன் அவன் மட்டுமே, அவன்தான் வணக்கத்திற்குத் தகுதியானவன், அவன் தனித்தவன், அவனுக்கு யாதொரு இணையுமில்லை, அவன் பரிபூரணமான தன்மைகளைக் கொண்டவன், அனைத்துக் குறைகளை விட்டும் நீங்கியவன், படைப்பினங்களுக்கு ஒப்பாவதை விட்டும் பரிசுத்தமானவன் என உறுதியாக நம்புவதாகும்.

**2.வானவர்களை நம்புவது** - வானவர்கள் நம் கண்களுக்குப் புலப்படாத ஒரு படைப்பினம். அல்லாஹ்வை வழிபட்டுக்கொண்டிருப்பவர்கள். படைத்துப் பரிபாலனம் செய்யும் சிறப்புத் தன்மைகளோ கடவுள் தன்மைகளோ எதுவும் அவர்களுக்குக் கிடையாது. ஒவ்வொரு முஸ்லிமும் அப்படியொரு படைப்பினம் உண்டு என நம்ப வேண்டும். அவர்கள் அதிக அளவில் உள்ளனர். அவர்களின் எண்ணிக்கையை அல்லாஹ்வை தவிர வேறு யாரும் அறிய முடியாது.

3.வேதங்களை நம்புவது - சத்தியத்தை விளக்குவதற்காகவும் அதன் பால் மக்களை அழைப்பதற்காகவும் அல்லாஹ், நபிமார்கள் மற்றும் தூதர்களில் சிலருக்கு வேதங்களை இறக்கி அருளினான் என ஒரு முஸ்லிம் நம்ப வேண்டும். உதாரணமாக மூஸா நபிக்கு தவ்ராத், ஈஸா நபிக்கு இன்ஜீல், தாவூத் நபிக்கு ஸபூர். மேலும் நபிமார்களில் இறுதி நபியான முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் இறக்கியருளிய குர்ஆனையும் நம்ப வேண்டும். **குர்ஆன்** : இது மனித குலத்திற்கு அல்லாஹ் வழங்கியிருக்கும் இறுதி வேதமாகும். இவ்வேதம் கூறிய பிரகாரம் செய்யாத எந்தச் செயலையும் எவரிடத்தில் இருந்தும் அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான். இதனைப் பாதுகாக்க அல்லாஹ்வே

பொறுப்பேற்றுள்ளதால் இதில் இடைச்செருகலோ மாற்றங்களோ நுழைந்திட முடியாது. இது இந்தக் குர்ஆனுக்குரிய தனிச் சிறப்பாகும். முந்தைய வேதங்கள் அப்படியல்ல. அவற்றில் இடைச் செருகல்களும் மாற்றங்களும் நுழைந்து விட்டன. காரணம் குர்ஆனைப்போல் அவற்றையும் பாதுகாக்க அல்லாஹ் பொறுப் பேற்கவில்லை.

**4.இறைத்தூதர்களை நம்புவது -** அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும். அதற்கு மாற்றமான அனைத்தையும் விட்டொழிக்க வேண்டும் என மக்களுக்குப் பிரச்சாரம் செய்வதற்காக அல்லாஹ் இறைத் தூதர்களை அனுப்பியுள்ளான் என ஒரு முஸ்லிம் நம்ப வேண்டும். இறைத்தூதர்கள் இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்கள். படைத்துப் பரிபாலிக்கும் சிறப்புத் தன்மைகளோ வழிபடுவதற்கான தகுதிகளோ எதுவும் அவர்களுக்குக் கிடையாது. மேலும் இறைத்தூதர்கள் மனிதர்களில் சிறந்தவர்கள். அல்லாஹ் அவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தூதுத்துவத்தை வழங்கினான்.
இறைத்தூதர்களை நம்பிக்கை கொள்வதில் நான்கு விஷயங்கள் உள்ளன:

- அவர்களின் தூதுத்துவம் உண்மையானது, சத்தியமானது என நம்புவது.
- அவர்களில் யாருடைய பெயரை நாம் அறிந்து உள்ளோமோ அந்த இறைத்தூதர்களை அவர்களின் பெயருடன் நம்புவது.
- அவர்கள் பற்றிய செய்திகளில் நம்பகமானவற்றை உண்மைப்படுத்துவது.
- அவர்களில் இறுதித் தூதரான முஹம்மது நபி(ஸல்) அவர்களின் ஷரீஅத் சட்டங்களின்படி செயல்படுவது. அதாவது இவர்கள் அனுப்பப்பட்ட பிறகு வேறு ஷரீஅத்தை - மார்க்கத்தை அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான் எனும் அடிப்படையில் செயல்பட வேண்டும்.

**5.இறுதி நாளை நம்புவது -** இறுதி நாள் என்பது மறுமை நாளாகும். அந்நாளில் தான் அல்லாஹ் மனிதர்கள் அனைவரையும் மீண்டும் உயிர்ப்பித்து எழுப்புவான்- அவர்களிடம் கேள்வி கணக்கு கேட்டு நற்கூலி அல்லது தண்டனை வழங்குவதற்காக. முடிவாக சொர்க்கவாசிகள் தத்தமது இடங்களில் மகிழ்ச்சியுடன் தங்குவார்கள். நரகவாசிகள் தத்தமது இடங்களில் வேதனையில் ஆழ்ந்து கிடப்பார்கள்.

**6.விதியை நம்புவது -** அதாவது நடந்ததையும் நடக்கப்போவதையும் நடக்க விருப்பதையும் அல்லாஹ் நன்கறிவான். மேலும் அல்லாஹ் நாடியதே நடக்கும். அவன் நாடாதது நடக்கப்போவதில்லை. நிகழுபவை அனைத்தும் அல்லாஹ்வுக்குத் தெரியாமல் அவனது நாட்டமில்லாமல் நிகழுவதில்லை என ஒரு மனிதன் நம்புவதாகும்.